மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

04.11.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## காணிகளை அபகரிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு பிள்ளையான் துணை போகின்றார்

### நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்



அபிவிருத்தி குழு கூட்டம் என்ற பெயரில் காணிகளை அபகரிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு பிள்ளையான் துணை போகின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாக குற்றம் சுமத்தியுள்ளார். பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களை நடாத்தாமல், நேற்றைய தினம் வாகரை பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் நடாத்தப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனை தான் ஒரு சதி நடவடிக்கையாகவே பார்ப்பதாகவும், குறிப்பாக வாகரையினை முற்றாக அரசாங்கத்திற்கு தாரை வார்ப்பதற்குரிய நடவடிக்கைகள் திரைமறைவில் முன்னெடுக்கப்படுவதாகவும் இரா.சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார். மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் இன்று(வெள்ளிக்கிழமை) கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த குற்றச்சாட்டுக்களை 02

## தேநீர் விருந்தினை நடத்த வேண்டாம்

வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதுவர்கள் உள்ளிட்ட அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கான பாரம்பரிய தேநீர் விருந்தினை நடத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

## மது பாவனை வேகமாக குறைவு

உலகில் மது அருந்துவது தொடர்பான தரவரிசையில் இலங்கை 79வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. கலால் ஆணையாளர் கபில குமாரசிங்க இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். அத்துடன், பொருளாதார அழுத்தம் காரணமாக நாட்டில் மது பாவனை வேகமாக குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் அண்மைக்காலமாக மது பாவனை மிகவும் குறைந்துள்ளது. மதுபானத்தின் விலை அதிகரிப்பு மற்றும் வருமானம் குறைவடைந்தமையே இதில் பிரதானமாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மைத்திரிக்கு கொரோனா

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளார். இதன்போது கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## புதிய கல்விப் புரட்சியின் தேவைப்பாட்டை உணர்த்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கல்வியை முன்னேற்றுவதற்கு நாடு பூராகவுமுள்ள பாடசாலை கட்டமைப்பு முறைமை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும்,புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ற வளங்களைக் கொண்டு அந்தப் பாடசாலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். நகர்புறங்கள் என்றால் ஒருவிதமாகவும் கிராமப்புறங்கள் என்றால் மற்றுமொரு விதமான கருத்து நிலவுவதாகவும் ஆனால் அதனை முற்றாக மாற்றியமைத்து புதிய கல்விப் 02



## அத்தியாவசிய சேவைகள் குறித்து வர்த்தமானி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க நேற்று (3) இரவு பல சேவைகளை அத்தியாவசியமானதாக மாற்றும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். மின்சார விநியோகம், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் எரிபொருளின் விநியோகம் அல்லது விநியோகம் தொடர்பான சேவைகள், மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற 02

## டெஸ்டெனியம், மெட்டா கம்ப்யூட்டிங் நிறுவனத்துடன் கிழக்கு பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



**Testenium, meta - Computing** நிறுவனத்துடன் கிழக்கு பல்கலைக்கழகம் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திட்டுள்ளது . **Testenium** நிறுவனமானது **Online Testing Platform** ஒன்றினை நிறுவி இயக்கிவரும் நிலையில் அதன் நிறுவுனரும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவருமான கலாநிதி அரசரட்ணம் அரசிளங்கோ பல்கலைக்கழகத்தின்பால் கொண்ட பற்றின் காரணமாக தகவல் தொழில்நுட்ப கல்வியின் அடுத்த பரிமாணத்தை நமது மாணவர்களிற்கு கொண்டு சேர்க்கும் வகையில் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். கிழக்குப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் அவர்களின் விடாமுயற்சியின் பலாபலனாகிய 02







## ஆசிரியர்களுக்கான சீருடையில் மாற்றம் இல்லை

தற்போதுள்ள பெண் ஆசிரியர்களுக்கான சீருடையில் மாற்றம் செய்யப்பட மாட்டாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் போக்குவரத்து நெருக்கடி காரணமாக பெண் ஆசிரியர்களுக்கான தற்போதைய சீருடையை மாற்றுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது



### காணிகளை அபகரிக்கும் அரசாங்கத்தின்

பகிரங்கமாக முன்வைத்துள்ளார். குறிப்பாக வாகரையில் இறால் வளர்ப்பு திட்டம் மற்றும் காணிகளை வழங்கும் திட்டங்களில் பாரியளவில் மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அதேபோன்று சேதனப்பசளை என்ற பெயரில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாகவும், இதற்கும் பிள்ளையான் துணை போகின்றார் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாக குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன், அபிவிருத்திக்குழு கூட்டங்களுக்கான அறிவிப்புகள் தங்களுக்கு முறையாக விடுக்கப்படுவதில்லை எனவும் இரா. சாணக்கியன் இதன்போது விசனம் வெளியிட்டுள்ளார். தான் இந்த கூட்டங்களில் பங்கேற்கக்கூடாது என்ற எண்ணத்திலேயே தனக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். எனினும், எந்த சந்தர்ப்பத்தில் மக்களுக்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் தான் குரல் கொடுக்க பின்னிற்கப்போவதில் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

### புதிய கல்விப் புரட்சியின் தேவைப்பாட்டை

புரட்சியை உருவாக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். நாட்டின் உயிர் நாடியாக கருதப்படும் சிறுவர் தலைமுறையை அறிவு,திறமை மற்றும் வசதிகளுடன் பூரணப்படுத்துவது தார்மீக பொறுப்பு என்று நம்பி அதற்கான நிலையான நோக்கை முன்நோக்காக கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் கீழ் 40 ஆவது பாடசாலை பஸ் நேற்று (03) அனுராதபுரம் வலிசிங்க ஹரிச்சந்திர கல்லூரிக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் மயக்கமடைந்து விழும் நிலை ஏற்ப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எதிர்கால சந்ததி எவ்வாறு ஆற்றல் மிக்கதாக இருக்கும் என கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர்,எதிர்கால அரசில் அனைத்துப் பாடசாலை குழந்தைகளுக்கும் மதிய உணவு இலவசமாக வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். ஆட்சி அதிகாரம் இல்லாவிட்டாலும் இந்த குறுகிய காலத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தி காட்டியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், “மூச்சு” மற்றும் “பிரபஞ்சம்” மூலம் பாரியளவிலான சேவைகளைச் செய்ய முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

### அத்தியாவசிய சேவைகள் குறித்து வர்த்தமானி

ஒத்த நிறுவனங்களில் நோயாளிகளை பராமரித்தல் உள்ளிட்ட சேவைகள் தொடர்பான அனைத்து சேவைகளும் மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் இருந்து மீண்டும் அத்தியாவசிய சேவைகளாக மாறியுள்ளன.

### டெஸ்டெனியம், மெட்டா கம்ப்யூட்டிங் நிறுவனத்துடன்

இம் முன்னெடுப்பு இலங்கை பல்கலைக்கழகங்களில் முதன்மையானது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் ஆங்கில போதனா மையத்தின் துறைத்தலைவரும் ஒப்பந்தத்தின் இணைப்பாளருமான கலாநிதி உமாசங்கர் கருத்துரை வழங்கும் போது அடுத்த மூன்று வருடத்தில் **meta-computing** மூலம் கிழக்குப்பல்கலைக்கமானது இலங்கையில் தனித்துவமான அடையாளமாக மாறும் என்பதில் ஐயமில்லை என குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்வில் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் பதில் உபவேந்தர் வைத்திய கலாநிதி கருணாகரன், தகவல் தொழிநுட்ப மையத்தின் இயக்குனர், மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட செங்கலடி ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் யுத்தத்தினால் பாதிப்புற்ற பெண் தலைமை தாங்கும் குடும்பங்களிற்கான வாழ்வாதார உதவிகள் நேற்று (03) திகதி செங்கலடியில் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சமூக பொருளாதார நெருக்கடியின்போது புடீஏ மற்றும் மனித விற்பனையால் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் இருந்து தப்பியவர்கள் உட்பட பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் தொடர்பாக செயற்பட்டுவரும் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் ஏற்பாட்டில் அதன் கிழக்கு மாகாண திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. மயூரன் மேரி லெம்பட் தலைமையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிறுவனத்தின் மனிதாபிமானத் திற்குரிய தேவைக்கான திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டத்தின் ஊடாகவே தெரிவு செய்யப்பட்ட 262 பயனாளிகளுக்கு 40,000ஃஸ்ரீ ரூபாய் பெறுமதியான உலருணவு பொருட் கொள்வனவிற்கான வவுச்சர்கள் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியன் எய்ட் நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் ஊடக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இச்செயற்திட்டத்தின் குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான வவுச்சர்களை வழங்கி வைத்து நிகழ்வை சிறப்பித்ததுடன், குறித்த நிகழ்வில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் மாவட்ட அலுவலகத்தின் அலுவலகப் பொறுப்பாளர் மு.ஜெயராஜன் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்ததுடன் பயனாளிகளுக்கான வவுச்சர்களை வழங்கி வைத்துள்ளனர்.

குறித்த வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்றைய தினமும், இன்றைய தினமும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் இவ்வாண்டிற்கான இரண்டாவது அபிவிருத்திக் குழுக் கூட்டம்





மட்டக்களப்பு மாவட்டத்தின் இவ்வாண்டிற்கான இரண்டாவது அபிவிருத்திக் குழுக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இன்று (04) திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இராசமாணிக்கம் சாணக்கியன், கிழக்கு மாகாண பிரதம செயலார் ஆர்.எம்.பீ.எஸ். ரத்னாயக ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

குறிப்பாக இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான இரசாயன மற்றும் சேதன உரத்தினை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அதற்கான முன்னாயத்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இதன்போது கடந்த ஆண்டில் மாவட்டத்தில் மெற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. மேலும் இம்மாவட்டத்தின் பொருளாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந், காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.நவரூபரஞ்ஜனி முகுந்தன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, உள்ளுராட்சி சபைகளின் தவிசாளர்கள், மாவட்ட பொலிஸ் மற்றும் இராணுவ தரப்பு பிரதானிகள், பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.



# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சு.செவ்: 12

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**20931 | வே | 1993**
கந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சு.செவ்: 08

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சு.செவ்: 09

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சு.செவ்: 03

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சு.செவ்: 10

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சு.செவ்: 07

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சு.செவ்: 10

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சு.செவ்: 06

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சு.செவ்: 06

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிடட்


18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# SHERLINA BEAUTY SALON
# SURESH SUGANTHY
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி










**08th of January 2023**
**Contact 076 9759197**
**At BMICH MAIN HALL**

# அடிப்படைவாதப் பொய்யர்களிடம் இருந்து நீதியை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது - ஸ்ரீநேசன்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான கண்மூடித்தனமாக அலுவலக அறிக்கை கண்டனத்துக்குரியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அதிகாரி மகேஷ் என்பவரால் வெளியிடப்பட்ட அறிக்கை முற்றிலும் பொய்யானது. அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவருமில்லை, அவ்வாறு இருந்தால் அவர்கள் விடுதலைப்புலிகளால்தான் காணாமல் ஆக்கட்டிருப்பார்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் 50 பேரளவில் வெளிநாடுகளில் உள்ளார்கள், படையினரால் எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை என்பதே அந்த அறிக்கையாகும். இலங்கை அரசின் இன அழிப்புக்கு சாதகமாக அந்த அறிக்கை அமைந்துள்ளது.

அடிப்படைவாதப் பொய்யர்களிடம் இருந்து அணுவளவும் உண்மைகளையோ நீதியையோ எதிர்பார்க்க முடியாது என்பதற்கு இது மேலுமொரு சான்றாக அமைகின்றது. மேலும், உள்நாட்டுப் பொறிமுறை என்பது பொய்யும் புரட்டும்கலந்த உள்நாட்டு மக்களை மட்டுமல்லாமல், உலகத்தையே ஏமாற்றும் கோயபல்ஸ் செயற்பாடு என்பதை உணரமுடிகின்றது. கிட்லரின் முக்கிய ஆலோசகரில் ஒருவர்தான் இவர். ஒரு பொய்யை மீண்டும் மீண்டும் சொல்லும் போது அதனை மக்கள் நம்பிவிடுவார்கள் என்பதே கோய பல்ஸின் ஏமாற்றுவித்தையாகும்.

அது அன்றைய கிட்லரின் சர்வாதிகார ஆட்சிக்குப் பொருந்தி இருக்கலாம். 1 ஆம் நூற்றாண்டின் இன்றைய காலத்தில் இனவாத அதிகார வர்க்கத்தினர் கோயபல்ஸின் ஆத்மார்த்த சிஷ்யர்களாகி விட்டதில் ஆச்சரியம் இல்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பாக நியமிக்கப்பட்டவர்கள் அதைத்தவிர எதைக் கூறுவார்கள்? உண்மையைக் கண்டறிதல், நீதியை வழங்குதல், மீண்டும் நிகழாமல் பாதுகாத்தல், நிலையான சமாதானத்தை ஏற்படுத்தல் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை சொன்னதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக மாறிவிட்டது. அடிப்படைவாத செவிகள், கண்கள், மூளைகள், தசைகள், எலும்புகள், இரத்தம் என்பவற்றால் ஆக்கப்பட்டவர்கள் சொல்வது ஒன்றுதான். அதாவது பல்லின மக்களை சமத்துவமாக அரவணைத்து ஆளும் தகுதி தமக்கு இல்லவே இல்லை என்று கூறுகின்றார்கள்.

எனவே, தமிழர்கள் தம்மைத்தாமே ஆள்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை ஏற்கத்தக்கது என்பதை அடிப்படைவாத ஆட்சியாளர்கள் மட்டுமல்ல அவர்களது அதிகாரிகளும் உணர்த்தி வருகின்றார்கள். அந்த வெளிப்பாடுகளில் ஒன்றுதான் காணாமல் ஆக்கப்பட்ட ஆணைக்குழுவின் இனவாத அறிக்கையாகும். அடிப்படைவாதிகளிடம் இருந்து உண்மை, நீதியை எதிர்பார்ப்பதென்பது கல்லியே நார் உரித்து அதனைக் கயிறாகத் திரித்து மலையைக் கட்டி இழுப்பதாகவே அமையும். 13 ஆண்டுகளாக மட்டுமல்ல 74 ஆண்டுகளாக 74 சதவீதமான சிங்கள மக்களில் வாக்குகளை மையமாகக் கொண்ட அதிகாரபோக ஆட்சியே நடைபெறுகின்றது.

பல்லின மக்களுத்தான பொதுமையான நீதியான ஆட்சி இல்லை. பூகோள அரசியல் தேவைகளுக்காக நசுக்கப்படும் தகரைப்பற்றைகளாகவே ஈழத்தமிழர்கள் இன்றும் நோக்கப்படுகின்றார்கள். தமிழர்கள் ஒற்றுமையாக திரண்டு ஒரே குரலில் நின்று சுயநிர்ணய உரிமையை அடைவதே ஒரே வழியாகும்" என தெரிவித்துள்ளார்.

# இளம் தொழில் வல்லுநர்களின் சங்க அங்குரார்ப்பண நிகழ்ச்சி





ஐக்கிய மக்கள் சக்தியின் இளம் தொழில் வல்லுநர்களின் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் செவ்வாய்க்கிழமை (01) கொழும்பில் நடைபெற்றது. இளம் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா அவர்களால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், தொடர்ந்து இடம் பெற்ற திறந்த கலந்துரையாடல் அமர்வில் எதிர்க்கட்சித் தலைவருக்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மற்றும் சமூக ஆய்வாளரும் எழுத்தாளருமான திருமதி சாரா கபீர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# யாழ்.மட்டுவில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்ட அமைச்சர்கள்



**அஸ்ஹர் இப்றாஹிம்**

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சின் கீழுள்ள பொருளாதார மத்திய நிலையங்களை மீள் வியாபாரச் செயற்பாட்டிற்கு கொண்டு வரும் நோக்கில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம் மட்டுவில் பகுதியில் சுமார் 170 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் அவர்களின் அழைப்பை ஏற்று கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா,கைத்தொழில் அமைச்சின் உயரதிகாரிகள், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்களின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட குழுவினர் குறித்த இடத்திற்கு உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று(03) நிலைமைகளை பார்வையிட்டனர்.

குறித்த விஜயத்தின் மூலம் உற்பத்தியாளர்களுக்கான நல்லதொரு சந்தை வாய்ப்பை உருவாக்கி வர்த்தகர்களுக்கான நல்லதொரு வர்த்தக தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் குறித்த ஒரு ஸ்திரமான பொருளாதார கொள்கையொன்றை ஏற்படுத்த முடியும். அத்துடன் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தில் இன்று இனங்காணப்பட்ட சிறு குறைபாடுகளை உடன் நிவர்த்தி செய்து ஓரிரு மாதங்களுக்குள் குறித்த மத்திய நிலையமானது மீண்டும் திறக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மின்சாரம் தாக்கி இறந்தவருக்கு 40 இலட்சம் நட்டயீடு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

பதுளை – நமுனுகுல தோட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தமிழரசன் கணேசமூர்த்தி என்ற இளைஞரின் மரணத்துக்கு நட்டயீடாக 40 இலட்சம் ரூபா (03.10.2022) வழங்கப்பட்டது. இதற்கான காசோலையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்துக்கு நேற்று வழங்கி வைத்தனர். அதேநேரத்தில் தோட்ட நிர்வாகம் உயிரிழந்த நபருக்கு இழப்பீட்டு நட்டயீட்டு தொகையாக 15 ஆயிரம் ரூபாவையும்,இறுதி சடங்கின் செலவை ஏற்பதாகவும் குறைந்த அளவிலான நட்டயீட்டை வழங்க திட்டமிட்டுயிருந்த நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதனை மறுத்திருந்தது. இருப்பினும் உயிரிழந்த இளைஞருக்கு நட்டயீட்டு தொகையாக 1 கோடி ரூபாய் வழங்க தோட்ட நிர்வாகத்தை காங்கிரஸ் வழியுறுத்திய நிலையில் இது தொடர்பாக தொழில் திணைக்களம்,மற்றும் தொழில் அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதன் பயனாக தோட்ட நிர்வாகம் உயிரிழந்த இளைஞருக்கு 40 லட்சம் ரூபாய் வழங்க சம்மதித்திருந்தது.இதனை ஏற்றுக்கொண்டதன் பின் இந்த 40 லட்சம் ரூபாவை தோட்ட நிர்வாகம் வழங்கியிருந்தது. இவ்வாறு வழங்கப்பட்ட தொகையை காசோலையாக உயிரிழந்த இளைஞரின் குடும்பத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச சின்னமுகத்துவாரம் பகுதியில் புதிய சிறுவர் பூங்கா

**ம.கிரிசாந்**

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவனது அண்மையில் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்றாற்போல் சிறுவர்கள் விரும்பும் வகையிலான புதிய விளையாட்டு உபகரணங்கள் நிறுவப்பட்டு ஆலையடிவேம்பு பிரதேச சபையினரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இதன் காரணமாக தற்போது பிரதேச சிறுவர்கள் மற்றும் சிறுவயது பாடசாலை மாணவர்கள் குறித்த சிறுவர் பூங்காவிற்கு சென்று மகிழ்வுடன் விளையாடிவருவதனை காணக்கூடியதாகவும் இருக்கின்றது.

இவ்வாறாக இருக்கின்ற நிலையில் உரிய தரப்பினருக்கு அதாவது ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் த.கிறோஜாதரன், ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பிரதேச நலன்விரும்பிகள் மற்றும் மக்கள் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர். மேலும் அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சின்னமுகத்துவாரம் பகுதியில் பிரதேச சிறுவர்களின் நலன்கருதி விரைவில் இன்னொரு புதிய சிறுவர் பூங்காவொன்று அமைக்கப்பட்ட இருப்பதாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

குறித்த சிறுவர் பூங்காவினை அமைப்பதற்கு ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் த.கிறோஜாதரன் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர்கள் அதற்கான நிதிகளை ஒதுக்கி ஒருசில அரச திணைக்களங்களில் அனுமதிகளை பெரும் தேவைப்பாடுகள் காணப்படுவதனால் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். சிறுவர்களுக்கு விளையாட்டு என்பது இன்றியமையாதது உளவியல் ரீதியான திருத்திப்படுத்தல் என்பது மிக முக்கியமானது. சிறுவர்களுக்கு விளையாட்டுடன் கூடிய கல்வி மிகச்சிறந்தது என்பதுடன் முக்கியமானது என பல ஆய்வுகளின் முடிவுகளும் காணப்படுகின்றது.

இது இவ்வாறாக இருக்கின்ற நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச சிறுவர்களுக்காக விரைவில் புதிய சிறுவர் பூங்காவொன்று கிடைக்க இருப்பது மக்கள் மத்தியில் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கின்றது. மேலும் ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் த.கிறோஜாதரன் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த
கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# இறை வழிபாட்டுடன் நினைவு கூரப்பட்ட ஆத்மாக்கள்



( வாஸ் கூஞ்ஞ)

அகில உலக திருச்சபையானது கார்த்திகை மாதம் இரண்டாம் திகதி மரித்த சகல ஆத்துமாக்களை நினைவுகூறும் தினமாக அனுஷ்டித்து வருகின்றது. இதற்கமைய மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை பங்கில் இவ் தினத்தை நினைவுகூறும் முகமாக பேசாலை கத்தோலிக்க சேமக்காலையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்ட பெற்றோர் உற்றார் உறவினர்கள் என கல்றைகளில் மலர்கள் தூவி மெழுகுதிரிகள் கொழுத்தி மரித்த ஆன்மாக்களுக்காக செபிக்கப்பட்டது.

இவ் சேமக்காலையில் 02.11.2022 அன்று பிற்பகல் நடைபெற்ற திருப்பலியானது பேசாலை பங்கு தந்தை அருட்பணிஏ.ஞானப்பிரகாசம் அ டி க ள ா ர ி ன ் ஓழுங்கமைப்பில் மன்னார் மறைமாவட்ட முன்னாள் குரு முதல்வரும் தற்பொழுது இளைஞர் ஆணைக்குழு இயக்குனருமான ஏ.விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் பெரிகட்டு பங்கு தந்தை அருட்பணி அருள்ராஜ் குரூஸ் அடிகளார் மற்றும் பேசாலை உதவி பங்குத் தந்தை அருட்பணி டிக்சன் அடிகளார் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கல்லறைகளை ஆசீர்வதித்த நிகழ்வுகளும் இடம்பெற்றது.

# உடனடியாக தேர்தலுக்குச் செல்லுமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கோரிக்கை



(வாஸ் கூஞ்ஞ)

தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கமும் ஜனாதிபதியும் மக்கள் ஆணையை இழந்த அரசாங்கமாகும். எனவேஇ உடனடியாக பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்லுமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் கோருகிறது. நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று 31.10.2022 திங்கட்கிழமை அன்று மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் நடைபெற்றது. இதன்போது (என்எவ்ஜீஜீ) யின் பிரதித் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் 'தனிநபர்களின் தேவைகளுக்காகவே காலத்திற்குக் காலம் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் அடிப்படையிலேயே இன்று **21A** என்கின்ற அரசியல் யாப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால்இ மக்கள் கடந்த பல மாதங்களாக நடாத்திய போராட்டங்களின் மூலம் மொத்த அரசியல் முறைமையையும் மாற்றக்கூடிய சமூக நல அரசியல் யாப்பு மாற்றத்தையே கோரியிருந்தனர்.

அவர்கள் ஜனாதிபதியைஇ பிரதமரை மாத்திரமன்றி நாடாளுமன்றத்தையே கலைத்து புதிய அரசியல் சீர்திருத்தத்தை செய்யும்படியே கோரியிருந்தனர். எனினும் கண்துடைப்பிற்காக ஒரு சில மாற்றங்களை மாத்திரம் செய்து மீண்டும் தங்களது அரசியல் நலன்களை பாதுகாக்கும் யாப்பு சீர்திருத்தங்களையே தற்போதைய அரசாங்கமும் கொண்டு வந்துள்ளது.. எனவே மக்கள் ஆணை இல்லாத இப்பாராளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட்டு தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும். அத்துடன் நாடு இன்று பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்து வருகின்றது. புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பதவியேற்ற போதுஇ நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு தன்னிடம் பல திட்டங்கள் இருப்பதாக கூறியிருந்தார்.

உல்லாசப்பயணத் துறையை அபிவிருத்தி அடையச் செய்வதன் மூலமும் ஐஎம்எவ் கடனுதவிகளை பெற்றுக் கொள்ளவும் தன்னால் முடியும் என அவர் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். எனினும் அவர் பதவியேற்று பல மாத காலங்கள் கடந்துள்ள நிலையில் எதிர்பார்த்த உல்லாசத்துறை வருமானங்களோ கடனுதவிகளோ கிடைக்கப்பெறவில்லை.

நாட்டின் இன்றைய பின்டைவுக்கு வழிவகுத்த காரணங்களில் ஒன்று முன்னாள் அரசாங்கம் அளித்த வரி சலுகையும் ஆகும். ஆனால் அவ்வரிச் சலுகையினால் பொதுமக்கள் அன்றி பெரும் பெரும் நிறுவனங்களே இலாபங்களை ஈட்டியிருந்தன. எனினும் தற்பொழுது அந்நிறுவனங்களிடம் செலுத்தத் தவறிய வரிகளை மீள செலுத்துமாறு பணிக்காத அரசாங்கம், எந்தவித நியாயமான அடிப்படைகளும் இன்றி மக்களின் வரிச் சுமைகளை மீண்டும் அதிகரித்து அவர்களின் அன்றாட வாழ்க்கையினை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது..

அது போலவே உல்லாசப்பயணிகளை கவரும் விதமாகவோஇ அத்துறையினை அபிவிருத்தி செய்யும் வகையிலோ எவ்வித திட்டங்களும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. இதனால் உல்லாசப்பயணத்துறையும் வீழ்ச்சியடைந்து டொலர் கையிருப்பு மிகக் குறைவடைந்துள்ளது .பங்களாதேஷ்.இ இந்தியா போன்ற நாடுகளும் கூட எமது நாட்டு வங்கிககளுடனான தொடர்புகளை நிறுத்தியுள்ளன.

எனவே இந்த பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளுக்கு ஆங்காங்கே பொருத்துக்களை போடுகின்ற திட்டங்களை விடுத்து ஜனாதிபதி முழுமையான தீர்வினை காணக்கூடிய திட்டங்களை வகுக்க வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது . அத்துடன், நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக ஒரு சில காலங்களுக்கு மாத்திரம் நடைமுறையில் இருக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமானதுஇ பிற்பட்ட காலங்களில் குறித்த 'ஷரத்து' மிக லாவகமாக நீக்கப்பட்டு நிலையான சட்டமாக இந்த நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் இதன் மூலம் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு இருந்தனர். பிற்பட்ட காலங்களில் முஸ்லிம்களும் தற்பொழுது இந்த நாட்டில் அரசாங்கத்திற்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராடுகின்ற எவராக இருப்பினும் அவர்களை கைது செய்வதற்கு வசதியான ஒரு சட்டமாக இந்த சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே இச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதை விடுத்து முழுமையாக இச்சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும் நல்லாட்சிகான தேசிய முன்னணி அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றது ' எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வூடக சந்திப்பின்போதுஇ நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் டொக்டர் ஸாஹிர்இ நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஏ.எல.எம். சபீல் (நளீமி) மற்றும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளர் பி.எம். முஜீபுர் ரஹ்மான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

ஹஸ்பர்

இளம் தலைமுறையினர் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சூட்சகமாக அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையை ஒழிக்க அனைவரும் ஒன்றுபட்டு செயற்படல் காலத்தின் தேவையாக காணப்படுவதாக திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரல தெரிவித்தார். திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று (03) அவரின் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்டத்தின் நகர் சார் பகுதிகளை மையமாக கொண்டு போதைப்பொருள் வர்த்தகம் நடைபெற்றபோதிலும் தற்போது கிராமங்களுக்கும் சென்றுள்ளன. இதனால் இளம் தலைமுறையினர் மற்றும் மாணவர்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருள் வர்த்தகர்கள் சூட்சகமான முறையில் தமது வியாபார செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்செயற்பாட்டை உடன் தடுத்து நிறுத்த நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படல் வேண்டும். குறிப்பாக இதனோடு தொடர்புபடுகின்றவர்கள் தொடர்பான தகவல்களை உரிய தரப்பினருக்கு வழங்கல் வேண்டும். இதற்காக மக்கள் தமது ஒத்துழைப்பை தொடராக வழங்கல் வேண்டும். குறித்த செயற்பாட்டை கிரமமாக மேற்கொண்டு செல்ல ஒன்றிணைந்த குழுவை உரிய தரப்பினரை இணைத்துக்கொண்டு மாதம் ஒரு தடவை அல்லது இரு வாரங்களுக்கு ஒரு தடவை கூட்டி உரிய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல், வியாபாரம் தொடர்பான தகவல்களை 1913, 1927 மற்றும் 119 ஆகிய குறும் தொலைபேசி இலக்கங்களுக்கு தெரிவிக்கக்கூடியதாக இருக்கும். போதைப்பொருள் பாவனை தொடர்பான தகவல் வழங்கும் நபர்களின் பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். இல்லையென்றால் மக்கள் இது தொடர்பான தகவல்களை வழங்க முன்வரமாட்டார்கள். அவ்வாறு தகவல் வழங்கி பாதிக்கப்பட்டவர்கள் பலர் உள்ளனர். எனவே இவ்விடயம் குறித்து கூடிய அவதானம் செலுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். கடந்த 10 மாதங்களில் திருகோணமலை பிராந்திய பொலிஸ் பிரிவு போதைப்பொருள் தொடர்பான 2400 க்கு அதிகமான சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலை தற்போது அமையப்பெற்ற இடம் வைத்தியசாலை அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க பொருத்தமானதாக அமையப்பெறவில்லை. இதனால் வைத்தியசாலை பணிப்பாளர் என்றடிப்படையில் தாம் பல அசௌகரியத்திற்கு உட்படுவதாகவும் குறித்த வைத்தியசாலையை பிறிதோர் இடத்திற்கு மாற்றுவதற்குறிய செயற்பாட்டை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வைத்தியசாலை பணிப்பாளர் இதன்போது வேண்டிக்கொண்டார். வைத்தியசாலை நிர்மாணிப்பதற்கான இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது.இச்செயற்பாட்டை வேறுகண் கொண்டு நோக்கக்கூடாது. திருகோணமலை வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். அதன் மூலமே மக்களுக்கான வைத்திய சேவைகளை சிறப்பாக மேற்கொள்ள முடியும். விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட வைத்தியசாலை பணிக்குழாத்தினருக்கான தங்குமிட வசதிகள் இன்மையால் அவர்களை இங்கு தொடராக சேவைக்கமர்த்துவதில் சவால்கள் காணப்படுகின்றன. எனவே இதனை அனைவரும் சாதக அடிப்படையில் நோக்கல் வேண்டும். பொது மக்களுக்கு இது குறித்து தவறான சிந்தனைகளை பரப்ப வேண்டாம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல வேண்டிக்கொண்டார்.

கழிவகற்றல் பிரச்சினை, கல்விசார் அபிவிருத்தி, காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், விவசாயம் உள்ளிட்ட விடயங்கள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, அரசியல் பிரமுகர்கள், திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கல்குடாவின் பிரபல ஐஸ் போதைப்பொருள் வியாபாரி அரபா நகரில் கைது



ஓட்டமாவடி பிரதேசத்தில் வசிக்கும் பிரபல ஐஸ் போதைப்பொருள் வியாபாரி நேற்றிரவு அரபா நகரில் வைத்து 16 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். 28 வயதையுடையவர் இவர் ஓட்டமாவடி பிரதேசத்தில் வசிப்பவர் என்பதுடன், இவரிடமிருந்து 16 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. காகித ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கதிரவெளி விஷேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருளை விற்பனைக்கு கொண்டு சென்ற மோட்டார் சைக்கிள் மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்த ஒரு தொகைப்பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது. இவர் நீண்ட காலமாக மிகவும் சூட்சுமான முறையில் போதைப்பொருளை விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, கொழும்பிலிருந்து மொத்தமாக போதைப்பொருளைக்கொண்டு வந்து விற்பனை செய்து வந்ததுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இவரை பல்வேறு தடவைகளில் கைது செய்ய முயற்சித்தும் சாதுர்யமாக தப்பித்து வந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் பின்னணியில் மேலும் பல பெரும் புள்ளிகள் இருப்பதாகவும் தகவல் கசிந்துள்ளது. மேலதிக விசாரணையுடன் சட்டநடவடிக்கைக்காக வாழைச்சேனை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# கல்முனை தலைமைக பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் கடற்கரை பள்ளிவாசல் சுற்றுச்சூழல் சிரமதானம்



**(பாரூக் சிஹான்)**

கல்முனை தலைமைக பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் கடற்கரை பள்ளிவாசலை அண்டிய பல பகுதிகள் இன்று சிரமதானம் செய்யப்பட்டன. அம்பாறை மாவட்டம் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திகவின் ஆலோசனைக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலினூடாக இச் சிரமதான பணியினை பொலிஸார் முன்னெடுத்தனர். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் குப்பைகூழங்கள் காடுமண்டிய இடங்கள் யாவும் துப்பரவு செய்யப்பட்டன. இதன்போது வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகளை பொலிஸார் அவ்விடத்தில் இருந்து அகற்றி சுத்தப்படுத்தி சூழலை அழகுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நடவடிக்கையின் போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக சேவை பொலிஸ் பிரிவு சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு போக்குவரத்து பிரிவு சிறு குற்றத்தடுப்பு பிரிவு இபெருங் குற்றத்தடுப்பு பிரிவு சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவு என்பன பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் நவீனமயப்படுத்தப்பட்ட இலங்கை வங்கி கிளை திறந்துவைப்பு





**(வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவில் நவீன மயப்படுத்தப்பட்ட இலங்கை வங்கி கிளை புதிய கட்டிடத்தில் இன்று(4) வெள்ளிக்கிழமை வங்கி முகாமையாளர் திருமதி யாழினி மோகனகாந்த் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. விழாவில் பிரதம அதிதியாக இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் சில்வா கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதியாக வங்கியின் கிழக்கு மாகாணத்திற்கான உதவி பொது முகாமையாளர் சிந்தியா மார்ட்டின் கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெககராஜனும் முன்னாள் உதவி பொது முகாமையாளர் வணிகசேகரவும் கலந்து கொண்டார்கள். காரைதீவின் முக்கிய பிரமுகர்கள் வங்கி முகாமையாளர்கள் கலந்து கொண்ட நிகழ்வின் ஆரம்பத்தில் பான்டா வாத்தியம் சகிதம் வரவேற்கப்பட்டு தேசிய மாகாண வங்கி கொடிகள் ஏற்றப்பட்டன. பின்னர் நாடா வெட்டி அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு உதவி பொதுமுகாமையாளர் சிந்தியா மார்ட்டின் வரவேற்புரை நிகழ்த்த பிரதான உரையை பிரதி பொது முகாமையாளர் பியல் செல்வா நிகழ்த்தினார். அங்கு புதிய கொடுக்கல் வாங்கல்கள் சம்பபிரதாயபூர்வமாக நிகழ்த்தி வைக்கப்பட்டது. மேலும் 18 பிளஸ் அதிஷ்ட சாலிக்கு தங்க நாணயம் பரிசாக வழங்கப்பட்டது. கட்டிட உரிமையாளர்க்கு கௌரவ பரிசு வழங்கி வைக்கப்பட்டது. இறுதியாக அம்பாறை மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் குமுதினி நன்றியுரையாற்றினார்.

# கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பாண்ட் வாத்தியக் குழுவிற்கு சீருடைகள் கையளிப்பு



**அஸ்ஹர் இப்றாஹிம்**

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பாண்ட் வாத்தியக் குழுவிற்கு அதி பெறுமதிமிக்க சீருடைகள் கையளிக்கப்பட்டுள்ளது. சாய்ந்தமருது ரெட்சிலி முகாமைத்துவ பணிப்பாளரும் இக் கல்லூரியின் பழைய மாணவருமான எம்.எம்.ஏ. ரஹீம் அவர்களது அன்பளிப்பினால் இவ் சீருடைகள் வழங்கப்பட்டன. அதிபரின் காரியலயத்தில் இடம்பெற்ற சீருடைகள் வழங்கப்படும் இவ் வைபவத்தில் கல்லூரியின் முதல்வர் எம்.ஐ ஜாபிர் , பிரதி அதிபர்கள், பாண்ட் வாத்தியக் குழுவிற்கு பொறுப்பான ஆசிரியரும் பாண்ட் பயிற்றுவிப்பாளருமான எம்.ஐ.எம் அமீர் மற்றும் பகுதித்தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வான் மழை பெய்து மரஞ் செடி செழித்து பல்லுயிர் வாழ மரநடுகை

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பேசாலை 'விழிகள் கலா முற்றும்' என்ற அமைப்பு பேசாலை பிரதான வீதியை அழகுபடுத்தும் நோக்குடனும் 'வான் மழை பெய்து மரஞ் செடி செழித்து பல்லுயிர் வாழனுமே' என்ற சிந்தனையை முன்னிருத்தி மாபெரும் மரநடுகை நிகழ்வு பேசாலையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இவ் அமைப்பின் இயக்குனர் தேசிய கலைஞர் 'தாஹித்யா' எஸ்.ஏ.உதயன் தலைமையில் சனிக்கிழமை (05.11.2022) காலை 10.30 மணியளவில் நடைபெறும் இவ் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக 'மெசிடோ' இயக்குனர் யாட்சன் பிகிராடோ அவர்களும்

சிறப்பு விருந்தினர்களாக பேசாலை பங்கு தந்தையும் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவருமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் , மன்னார் விவசாய திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் திருமதி மெண்டிஸ் அல்ஜின் குரூஸ் , எல். யூ.சீ.என். இணைப்பாளர் ஏ.ஷ 'யாம் திங் சொய்சா கௌரவ விருந்தினர்களாக அரசசாரா நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் பொறியியலாளர் எம்.எஸ்.ஏ.சுதாகர் , பேசாலை பீச் ஹோட்டல் உரிமையாளர் பொறியியலாளர் ஏ.றொபட் பீரிஸ் ஆகியோர் கலந்து கொள்ளுகின்றனர்.


# திருகோணமையில் மூவின சமயபாட இணைப்பாளர்களுக்கு செயலமர்வு

**எஸ்.சிராஜ்தீன்**

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர உயர்தர வகுப்புகளின் சமயபாட கற்பித்தல் வாண்மை யை அதிகரிக்க பாடமேற்பார்வை செய்யும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று எதிர்வரும் ஒன்பதாந்திகதி கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. வலயத்தில் கடமையாற்றும் மூவின சமயபாட உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர். செயலமர்வுக்கு சமூகமளிக்கும் போது ஐந்து வருட பெறுபேற்று பகுப்பாய்வு புள்ளிகள் செயல்திட்டங்களை செயலயமர்வுக்கு கொண்டுவருமாறு மாகாணக்கல்விப்பணிப்பாளர் திருமதி புள்ளநாயகம் கேட்டுள்ளார்.

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

# Strengthen MMDA அமைப்பானது நீதி அமைச்சரை சந்தித்தது



முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்திற்குத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களினால் நியமிக்கபட்ட குழுவினுடைய பரிந்துரைகளில் சமூகத்திற்கு இருக்கின்ற அதிருப்தி தொடர்பில் நீதி அமைச்சருக்கு தெரியப்படுத்துவதோடு, அந்த அறிக்கை தொடர்பாக இருக்கின்ற விமர்சனங்களையும், முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தினைத் திருத்தம் செய்கின்ற போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வலியுறுத்துவதற்காகவும் இந்த சந்திப்பானது ஏற்பாடு செய்யப்பட்டது.

நேரில் 5 உறுப்பினர்களும் இணையவழியாக 5 உறுப்பினர்களும் என மொத்தமாகப் 10 உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். குறித்த கலந்துரையாடலில், முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களினால் நியமிக்கபட்ட குழுவினுடைய பரிந்துரைகளில்

1. எமது மார்க்கத்தினுடைய வழிகாட்டல்களுக்குப் புறம்பான திருத்தங்கள் முன்மொழியப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

2. அதுபோல இந்த நாட்டிலே நீண்ட காலமாக நல்லிணக்கத்தோடு வாழ்கின்ற எமது சமூகத்தினுடைய உரிமைகளையும் அடையாளங்களையும் இல்லாமல் ஆக்கக்கூடிய வகையில் செய்யப்பட்டிருக்கின்ற பரிந்துரைகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது.

3. மேலும் செய்யப்படுகின்ற திருத்தங்களாவன ஏற்கனவே இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வை தருவது மாத்திரமல்லாமல் வேறு புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்காதவையாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், தற்போது முன்மொழியப்பட்டிருக்கின்ற திருத்தங்களினால் தோன்றக்கூடிய புதிய பிரச்சினைகள் தொடர்பாகவும் நீதி அமைச்சருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

மேற்சொன்ன மூன்று அடிப்படையிலும் எமது சமூகத்திற்குப் பாதகமான விடயங்களை உள்ளடக்கி இருக்கின்ற, முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களினால் நியமிக்கபட்ட குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையில் சட்டத் திருத்தமானது செய்யப்படக் கூடாது என்றும், அந்த அறிக்கையானது நிராகரிக்கப்பட வேண்டும் எனவும், குறித்த ஆலோசனைக் குழுவானது கலைக்கப்பட வேண்டும் எனவும் நீதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்தோடு இந்தக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்ற அறிக்கையானது பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தினுடைய அபிலாசைகளைப் பிரதிபலிக்கவில்லை என்பதோடு இந்த அறிக்கையானது பெரும்பான்மையான முஸ்லிம்களது அதிருப்தியைச்சம்பாதித்துள்ளது என்ற விடயமும் நீதி அமைச்சருக்கு எத்தி வைக்கப்பட்டது. மேற்சொன்ன விடையங்கள் உள்ளடக்கப்பட்ட விரிவான அறிக்கையொன்றும் நீதியமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களினால் நியமிக்கபட்ட குழுவினுடைய அறிக்கை மீதான அதிருப்தியினை சமூகமாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உணரப்பட்டிருப்பதால் காலந்தாழ்த்தாமல் இயலுமான ஜனநாயக வழிகளில் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்துமாறு **#StrengthenMMDA** அமைப்பு முஸ்லிம் சமூகத்தைக் கேட்டுக் கொள்கின்றது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com